மீன் உறைய வைக்கும் இத் தொழிற்சாலையில் இந்த நிறுவனம் ஒப்படைக்கப்படும் என்று குத்தகை நிறுவனம் தற்போது மீனளத் இத் தொழிற்சாலை 31—7—1971 அன்று மீனளத்துறையிடம் துறை இயக்குநருக்குத் தெரிவித்துள்ளது.

மீன் உறைய வைக்கும் இத்தொழிற்சாலையில் இந்த நிறுவனம் சுமார் 100 தொழிலாளர்களைத் தற்போது வேலைக்கு அமர்த்தியுள்ளதாக மீனளத் துறை இயக்குநர் தெரிவித்துள்ளார். இத் தொழிற்சாலையை மேற்கொண்ட பின்னர், ஒப்பந்தப் புள்ளிகளை வரவழைத்து மீண்டும் புதிதாகக் குத்தகைக்கு விட அரசு கருதியுள்ளது. புதிய நிர்வாகம் செயல்படத் தொடங்குகையில் அதிக அளவில் தொழிலாளர்கள் வேலை வாய்ப்புப் பெறுவர் என்று எதிர்ப்பார்க்கப்படுகிறது. இது தொடர்பாக ஏற்படும் அந்நியச் செலாவணி இழப்பைப் பொறுத்த வரையில், சென்னை மாநகரிலும் அதைச் சுற்றிலும் மீன் உறைய வைக்கும், பதப்படுத்தும் ஏனைய ஐந்து தொழிற்சாலைகள் இருக்கின்றன. மூலப்பொருள்கள் தற்போது கிடைக்காமையாலும் உறைய வைக்கும் திறன் அதிக அளவில் இருப்பதினாலும், கிடைக்கும் மூலப்பொருள்கள் அனைத்தும் பயன்படுத்தப்படும். எனவே, அந்நியச் செலாவணியை ஈட்டுவதில் குறைவு ஏதும் இருக்காது. இவ்விளக்கத்தின் காரணமாக இந்த ஒத்திவைப்புத் தீர்மானம் அனுமதிக்கப்படத் தேவையில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கொடுத்த விளக்கத்திற்குப் பிறகு இத் தீர்மானத்திற்கான அவசியம் இல்லை என்று கருதுகிறேன். எனவே, அதற்கான அனுமதி மறுக்கப்படுகிறது.

3. அரசினர் தீர்மானம்

விதி 41 (3)-ஐ தளர்த்தல்.

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன்: பேரவைத் தலைவரவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகின்றேன்—

"சட்டப் பேரவையின் 244-வது விதியின் கீழ், 41-வது விதி மூன்றுவது உட்பிரிவின்படி ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டுவரக் கூடாது என்பதைத் தளர்த்த வேண்டும்."

தீர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.

4. கவன ஈர்ப்பு.

(அ) குன்னூரில் குடிநீர் கிடைக்காமையும் அரசு எடுக்க வேண்டிய நடவடிக்கை குறித்தும்.

திரு. சோ. கருணைநாதன்: பேரவைத் தலைவரவர்களே, சட்டப் பேரவையின் 41-வது விதியின் கீழ் "நீலகிரி மாவட்டம் குன்னூர் நகரத்தில் தற்போது குடிநீர் கிடைக்காமல் மக்கள் கஷ்டப்படுகிறார்கள் என்பதுபற்றியும், இது குறித்து அரசு எடுக்க வேண்டிய நட

வடிக்கைகள் பற்றியுமான'' அவசரப் பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி: பேரவைத் தலைவரவர்களே, கூனூர் நீர் வழங்கு திட்டத்திற்கான, மேம்பாடுகள், ஆயுள் ஈட்டு நிதிக் கழகக் கடன் உதவித் திட்டத்தின்கீழ் ஆலோசிக்கப்பட்டு வருகின்றன. கூனூர் நகராட்சி நீர்வழங்கு திட்டத்திற்கு மேம்பாடுகள் செய்வதற்கான வரைவு செயற்குறிப்புகளைப் பொறுத்த வரையில் திட்டத்தை நிறுவும் பணிக்கான ரூ. 56.60 லட்சமும், பேணுதற்காக ஆண்டு தோறும் ரூ. 87,500-ம் செலவாகுமென மதிப்பிடப்படுகிறது. நீர்வழங்கு மேம்பாட்டுத் திட்டத்தை மேற்கொள்ள கூனூர் நகராட்சியின் நிதிநிலை மனநிறைவளிப்பதாக உள்ளதா என்பதை மதிப்பிடுவதற்காக, அந்த நகராட்சியின் நிதிநிலை குறித்து விவரங்களை அனுப்புமாறு கூனூர் நகராட்சி கேட்கப்பட்டுள்ளது. நகராட்சியின் பதில் எதிர்பார்க்கப்படுகிறது.

இதற்கிடையில், கூனூர் நகராட்சி மன்றத் தலைவர், இத் திட்டத்தை விரைவில் நிறைவேற்றுமாறு வேண்டி, தமிழ்நாடு நீர் வழங்கு வடிக்கால்வாரியத் தலைவருக்கு முறையீடு ஒன்றை அனுப்பினர். கூனூர் நகராட்சியின் தற்போதைய நிதிநிலை மிகச் சீர்கேடுற்று இருப்பதால், சுமார் ரூ. 9 லட்சம் செலவாகக்கூடிய இத் திட்டத்தின் முதல் நிலையை மட்டும் நிறைவேற்ற எடுத்துக் கொள்ளுவதெனத் திட்டமிடப்பட்டுள்ளது. அதற்கிணங்க, தமிழ்நாடு நீர் வழங்கு—வடிகால் வாரியம் திட்டத்தை மாற்றியமைக்க நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. மாற்றியமைக்கப்பட்ட செயற்குறிப்புகள், வாரியத்தால் முதற்கண் ஆலோசிக்கப்பட்டு, பின்னர் அதன் பரிந்துரைகளுடன் அரசின் ஒப்புதலுக்காகப் பணிந்தனுப்பப்பட வேண்டும் என்பதை எடுத்துச் சொல்லி, இந்த விளக்கத்தின் காரணமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மனநிறைவு ஏற்படும் என்று கருதுகிறேன்.

(ஆ) இராசபாளையம் திரு. பெ. சு. கந்தையா கொலை செய்யப்பட்டதும் அதன் விளைவுகளும்.

திரு. க. சுப்பு: பேரவைத் தலைவரவர்களே, சட்டப்பேரவையின் 41-வது விதியின் கீழ், ''இராஜபாளையம் சட்டமன்றத் தொகுதியில் முற்போக்குக் கூட்டணியின் வெற்றிக்காக முழுமனத்தோடு பாடுபட்ட திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த முன்னாள் நகர் மன்ற உறுப்பினர் பெ. சு. கந்தையா படுகொலை செய்யப்பட்டும், திராவிட முன்னேற்றக் கழக ஊழியர்கள் பால்ராஜ், அய்யனர், மற்றும் பலரும் பட்டப் பகலில் வெவ்வேறு இடங்களில் தாக்கப்பட்டும், இவற்றைத் தொடர்ந்து கட்சி பூசல்கள் காரணமாக பொது மக்களின் உயிருக்கும் உடைமைக்கும் பாதுகாப்பற்ற நிலைமை உருவாகியுள்ளதை ஒட்டி அரசாங்கம் மேற்கொள்ள வேண்டிய உடனடி நடவடிக்கை குறித்து'' அவசரப்பொது முக்கியமான காரியத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.